# DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.05/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பாலசுப்பிரமணியன் | Age | : | 53 |
| F/N | | மாணிக்கம் | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர், அனுப்பர்பாளையம் காவல் நிலையம், திருப்பூர் |
| Village | : | | | | |
| District | : | திருப்பூர் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 23-rd day of March 2023.

**23.03.2023**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது திருப்பூர் மாநகரம் அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 26.09.2019ம் தேதி இராமநாதபுரம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது 19.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திருமதி. சசிகலா, WHC 562 திருமதி.சாரால் அவர்களுடன் அத்தியாவசிய பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் சம்மந்தமாக கமுதி to பேரையூர் ரோட்டில் அரசு மருத்துவமனை முன்பு தகவலாளி சொன்ன தகவலின்படி வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும்போது எதிரே வந்த TN 65 F 3980 என்ற பதிவெண் கொண்ட TVS XL HEAVY DUTY இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் தமிழக அரசால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தலா 50 கிலோ எடை கொண்ட 2 மூடை ரேசன் புழுங்கல் அரிசி பாலிதீன் சாக்கில் இருந்தது.

2. வாகனம் ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பேரையூர் குருசாமி மகன் போஸ் என்பவரை சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது மேற்படி பொருட்களை வைத்திருந்தற்கான எந்த ஆவணமும் இல்லாத காரணத்தினால் 19.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் விசாரிக்கையில் போஸ் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், காவலர் சாரால் முன்னிலையிலும் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி போஸ் என்பவரின் வீட்டிற்கு சென்று அவர் வீட்டில் வைத்திருந்த தலா 50 கிலோ எடை கொண்ட 13 சிப்பம் ரேசன் புழுங்கல் அரிசி, தலா 50 கிலோ எடை கொண்ட 5 சிப்பம் ரேசன் பச்சரிசி மொத்தம் 20 சிப்பம் ரேசன் அரிசிகளையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், சாரால்

என்பவரும் கையெழுத்து செய்தோம். (**சம்பவ இடத்தில் தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**எதிரி வீட்டில் வைத்து தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் மேற்படி பொருட்களை கமுதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கியில் ஒப்படைத்து 23.30 மணிக்கு எதிரி மற்றும் இருசக்கர வாகனத்துடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. சம்பவ தினத்தன்று எங்கள் காவல் நிலையத்திலிருந்து 17.30 மணிக்கு காவல் வாகனத்தில் அனைவரும் கிளம்பினோம். சம்பவ இடமானது எங்கள் காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் துல்லியமாக சொல்லமுடியாது. அன்றைய தினம் ரோந்திற்கு எதார்த்தமாக சென்றோம். சம்பவ இடத்தில் மட்டும் தான் அன்றைய தினம் சோதனை செய்தோம். சம்பவ இடத்தில் அரை மணி நேரம் சோதனை செய்தோம். சம்பவ இடத்திற்கு எங்கள் காவல் நிலையத்திலிருந்து ஒரு மணி நேரத்தில் சென்றுவிட்டோம். 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்றுவிட்டோம். சம்பவ இடத்தில் சுமார் 10 வாகனங்களை சோதனை செய்தோம். 10 வாகனங்களின் விபரங்கள் எனக்கு தெரியாது. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் கூடும் இடம் என்றால் சரிதான். அரசு மருத்துவமனை அருகில் உள்ளது என்றால் சரிதான். பொதுமக்கள் அங்கு இல்லாததால் அவர்களை விசாரிக்கவில்லை.

2. சம்பவ இடத்தில் பொதுமக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றாலும் நாங்கள் சம்பவயிடம் செல்லாததால் தான் அவர்களை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் நீதிமன்ற பணிகளை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எங்கள் காவல் நிலையத்தில் ஐந்து நபர்கள் பணியில் இருந்தார்கள். நான் நீதிமன்ற பணி மற்றும் பிற பணிகளை செய்வேன். நான் அன்றைய தினம் நீதிமன்ற பணியில் இருந்தேன் என்றாலும் ரைடுக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் ஒரு அத்தாட்சி சம்பவயிடத்தில் வைத்தும், மற்றொரு அத்தாட்சி எதிரியின் வீட்டில் வைத்தும் தயார் செய்தோம். அத்தாட்சி தயார் செய்யும்போது தனிப்பட்ட நபர்களை நாங்கள் விசாரிக்கவில்லை. மருத்துமவனையின் நுழைவாயிலில் காவலர் ஒருவர் எப்போதும் இருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. எதிரியின் வீட்டை சுற்றி பத்து, பதினைந்து வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த இடத்தில் சார்பு ஆய்வாளர் ஒரு சில நபர்களை சாட்சியாக அழைத்தார் அவர்கள் முன்வரவில்லை. எதிரியின் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அன்றைய தினம் பணியில் இல்லாததால் தான் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை அன்றைய தினமே விசாரித்தார்கள். ஆய்வாளர் எந்த தேதியில் விசாரித்தார் என்று ஞாபகம் இல்லை. பொதுவாக நாங்கள் பாக்கெட் டைரி ஒன்றை வைத்திருப்போம். சார்பு ஆய்வாளரிடம் அந்த பாக்கெட் டைரியை கொடுத்தேன். அவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்பதை பற்றி எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட

அரிசி ரேசன் அரிசி தான் என்று சொல்லும் நிபுணர் நான் இல்லை என்றால் சரிதான். அன்று கைப்பற்றப்பட்ட பைகளில் அரசு முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

4. சம்பவ இடத்தில் ரேசன் பொருட்களை எடை போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்களை எங்கள் வாகனத்திலேயே ஏற்றி குடோனில் ஒப்படைத்தோம். மேற்படி பொருட்களை எங்கள் வாகனத்தில் ஏற்றமுடியாது என்றால் சரியல்ல. குடோனில் ரேசன் பொருட்களை சுமார் இரவு 10.00 மணிக்கு ஒப்படைத்தோம். சம்பவ தினத்தன்று எந்த பொருளையும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றாலும், நான் அன்றைய தினம் காவல் நிலையத்தில் தான் இருந்தேன் என்றாலும் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. அத்தாட்சியில் நான் தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சார்பு ஆய்வாளர் விசாரணையில் கூறிய விபரத்தையே தான் தற்போது நீதிமன்றத்திலும் கூறினேன் என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும், புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அத்தாட்சியிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நாங்கள் அன்றைய தினம் TATA SUMO FACIO வாகனத்தில் சென்றோம். அதை ஓட்டியது நான் தான். அந்த வாகனத்தில் டிரைவருடன் சேர்ந்து 9 நபர்கள் செல்லலாம்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**